திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, பங்களா தேஷிலிருந்து வந்த அகதிகளுக்கு மத்திய அரசாங்கம் செலவழிக்கும் ஒருநாள் தொகைகூட பர்மா—இலங்கையிலிருந்து வரும் அகதிகளுக்குச் செலவிடப்படவில்லை. இலங்கை—பர்மா அகதிகளுக்குச் செலவிடப்படுவது மிகவும் குறைவாக இருக்கிறது. அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில் அந்த உதவித் தொகையை அதிகரிக்க மத்திய அரசாங்கத்திடம் இந்த அரசு போராடுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, நாங்கள் வற்புறுத்துகிறோம். கனம் உறுப்பினர் அவர்களும் வற்புறுத்தினால் நிச்சயமாக அதிகமாகக் கிடைக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்விக்கான துணை வினாக்கள் முடிவுற்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது * என்று குறிப்பிட்டார்கள். இது வெளி நாட்டு உறவைப் பற்றிய விஷயம். ஆகவே, இவற்றைச் சட்ட சபைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். அதேபோல் பத்திரிகையாளர்களும் இதைப் பிரசுரிக்க வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விற்பனை வரி.

* 300 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவு—வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

பலகட்ட விற்பனை வரியினை ஒரு முனையில் வசூலித்திட செயற் குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, வியாபாரிகள் பொருட்களின் விலைகளை உயர்த்துவதற்கு பலகட்ட விற்பனை வரியை ஒரு சாக்காக வைத்துக்கொண்டு விலைகளை ஏற்றிவிடுகிறார்கள். இதனால் பொதுமக்கள் மிகவும் நஷ்டப்படுகிறார்கள். ஆகவே, இதை முன்னிட்டாவது ஒருமுனை விற்பனை வரி கொண்டு வர அரசு ஆலோசிக்குமா ?

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.

1972 மார்ச் 4]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, பல கட்ட விற்பனை வரி, ஒருமுனை விற்பனை வரி போன்றவற்றிற்கும், விலைவாசிகளைக் கூட்டுவதற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை.

* 301 **வினா—திரு. எம். முத்தையா** : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) ரேடியோ மீது விதிக்கப்படும் விற்பனை வரியை குறைக்க வேண்டுமென்று ரேடியோ தயாரிப்பாளர்கள் ஏதேனும் வேண்டுகோள் விடுத்துள்ளார்களா ;

(இ) ஆம் எனில், அது பற்றி அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) கோரிக்கை அரசால் பரிசீலிக்கப்பட்டு ரேடியோமீது விதிக்கப்படும் விற்பனை வரியை குறைக்க இயலாமை தெரிவிக்கப் பட்டது.

Court for Valliyur

* 302 Q.—THIRU T. GANAPATHY: Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to locate a District Munsif-*cum*-Sub-Divisional Magistrate Court at Valliyur in Nanguneri taluk?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், புதிதாக டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டுகள் அமைப்பதற்காகவும், எந்தெந்த இடங்களில் எந்த எந்த அளவிற்கு அவரவர்களுடைய ஜூரிஸ்டிக்ஷன் இருக்க வேண்டுமென்பதற்காகவும் வரதராஜன் தலைமையிலே ஒரு குழு ஓராண்டுக்காலமாக இருக்கிறதே, அந்தக் குழு தனது சிபாரிசுகளைக் கொடுத்திருக்கிறதா ? அப்படி வந்து விட்டால் அதிலே இந்த வள்ளியூர் போன்ற இடங்களும் சேர்க்கப்பட்டுள்ளனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரசாங்கத்திற்கு அறிக்கை இன்னும் வரவில்லை.